மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தஞர் : (அ) ஆம். வழங்கப்பட்டுள்ளன.

(இ) 9,732 இரசாயன உர அட்டைகள் விநியோகிக்கப்பட்டு, 8798 நபர்களுக்கு உரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தாமதமாக பயிர் செய்துள்ள மீதமுள்ள நபர்களுக்கு உரங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

(உ) 10,192 ஏக்கர்கள்.

திரு. ச. சங்குமுத்துத் தேவர் : இந்த மாதிரி கார்டு வழங்கப்படுவதில் ஊராட்சி வாரியாக கணக்கிருக்கிறதா ?

அத்துடன் இந்த கார்டுகள் வழங்கப்படுவதில் சில கிராமங்கள் இனும் கிராமமாக இருப்பதால் பயிர் எடுப்பு கணக்குப்படி உரக் கார்டுகள் வழங்கப்படுகின்றன. செவ்வந்திபுரம் போன்ற கிராமங்களிலே சரியாக கார்டுகள் வழங்கப்படாமல் இருந்து, பிறகு அது அரசின் கவனத்திற்குத் கொண்டு வரப்பட்டு உரம் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தஞர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செவ்வந்திபுரம் போன்ற சில கிராமங்களிலே உர அட்டைகள் வழங்கப்படவில்லை என்று சொன்ஞர்கள். இது கவனிக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

புதிய முட்டைகோஸ் ரகம்.

*677 விஞ—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரியில் ''செப்டம்பர்'' என்ற புதிய முட்டைகோஸ் ரகம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தஞர் : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ''செப்டம்பர்'' என்ற புதிய முட்டைகோஸ் பயிரிடும் விவசாயிகளுக்கு ஏதாவது ஊக்க ஊதியத் தொகை அளிக்க திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தஞர் : இந்த ''செப்டம்பர்'' முட்டைகோஸ் என்பதற்கான விதையை மேற்கு ஜெர்மனியிலிருந்து வரவழைத்து நீலகிரியிலே இருக்கும் ''இந்தோ-ஜெர்மன் ப்ராஜக்ட்டிலே'' ஊக்குவிக்கப்பட்டது. 1971-ல் நீலகிரியில்

இது பரிட்சிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 500 ஏக்கராவிற்கு வேண்டிய விதைகளை வரவழைத்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இது இந்தோ-ஜெர்மன் ப்ராஜக்ட்டின்கீழ் உள்ள இடங்களுக்கு கொடுக்கப்படுகிறது. மேற்கொண்டு இந்த விதைகளை நீலகிரி மாவட்டத்திலே பெருக்கமுடியுமா என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

திரு. கு. அ. பொம்மன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது, மேற்கு ஜெர்மனியிலிருந்து இந்த விதைகள் வரவழைத்துத் தரப்படுவதாகச் சொல்லுகிறார்கள். இந்த விதை நகர மக்களுக்குத்தான் பயன்படுகிறதேயொழிய கிராம மக்களுக்குப் பயன்படவில்லை என்பதை நீலகிரி மாவட்டத்திலே இருக்கும் மக்கள் உணருகிறார்கள். காரணம், இந்த புதிய விதை ஒரு கிலோ விலை ரூ. 400 என்று சொல்லுகிறார்கள். எனவே, கிராம மக்களுக்கு இந்தவிலையைக் குறைத்துக் கொடுத்து, அவர்களும் இதனால் பயனடையக் கூடிய வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இப்போது தேவையான அளவிற்கு இந்த விதைகளைக் கொடுக்க முடியாமல் இருக்கிறோம்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, இந்த கேபேஜ் சாப்பிடுவதால் அறிவு மந்தமாகிவிடுவதாகச் சொல்கிறார்கள். மெடிக்கல் காலேஜில் டல்-ஹெடட் ஆக உள்ள மாணவர்களை கேபேஜ் தலையன் என்று சொல்லுவார்கள். அது கேபேஜ் சாப்பிட்டதால் வந்ததா என்று ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறதா? அல்லது இதைச் சாப்பிட்டால் அறிவு விருத்தியாகும் என்று சொல்வார்களா? மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்வர்கள் ஏதோ சொல்வார்கள் போலிருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படி மாணவர்களைப் பார்த்து சொல்வார்களானால் மாணவர்களின் கோபத்திற்கு ஆளாவார்கள். கோவை செழியன் அவர்கள் அந்தக் கருத்தை இங்கே சொல்வதன்மூலம் மாணவர்களின் கோபத்திற்கு ஆளாகவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கோவை செழியன் சாப்பிட்டிருப்பார் போலிருக்கிறது. ஆகையால்தான் இப்படி சொல்கிறார்.

திரு. கோவை செழியன் : ஆகையால்தான் உங்களைத் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : வேடிக்கையாக மாணவர்களே அப்படிச் சொல்லியிருக்கலாம். உண்மையில் சொல்லியிருக்க முடியாது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இந்த ''செப்டம்பர்'' ரகம் ஆண்டுக்கு எத்தனை தடவை வருகிறது ? எந்தத் திங்களில் ஆரம்பிக்கப்பட்டு எப்போது முடிகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த ''செப்டம்பர்'' 110 நாள் பயிர். பொதுவாக ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் பயிரிடப்படுகிறது. நீலகிரி மலையில் இப்போது பயிராகிறது என்று கருதப்படுகிறது. இந்தப் புதிய முட்டைகோஸ் வேறெங்கும் பயிராகுமா என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

குழந்தைகள் நல்வாழ்வு இல்லம், தஞ்சாவூர்.

* 352 வின—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரிலுள்ள குழந்தைகள் நல்வாழ்வு இல்லத்திற்கு நவீன கட்டடம் கட்ட அரசு நிதி உதவி ஏதேனும் அளித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், விபரம் யாது ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) தஞ்சையில் சமூக நலத்துறையின் மூலம் குழந்தைகள் நல்வாழ்வு இல்லம் ஏதும் நடக்கவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

School for Deaf and Dumb

*353 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state the number of Schools for Deaf and Dumb getting assistance from the Government in Kanyakumari district?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : ஒன்று.